# பிபிஆர், பிஏ டிபிகேஎல் வீடமைப்புப் பகுதிகளுக்கான

# வாடகை பாக்கி 70 மில்லியன் ரிங்கிட்டை எட்டியது





கோலாலம்பூர், மே 20-

கோலாலம்பூரில் பிபிஆர் எனப்படும் மக்கள் வீடமைப்புப் பகுதி, கோலாலம்பூர் மாநகர் மன்றத்தால் நிர்வகிக்கப்படும் பொது வீடமைப்புப் பகுதி ஆகியவற்றில் குடியிருப்போர் செலுத்தாத வாடகை பாக்கி 70 மில்லியன் ரிங்கிட்டைத் தொட்டிருக்கிறது.

இவ்வாறு செலுத்தப்படாத வாடகை பாக்கிகள் நிலுவையில் இருப்பதால் சம்பந்தப்பட்ட வீடமைப்புப் பகுதிகளைப் பராமரிப்பது, சுற்றுப்புற வசதிகளை மேம்படுத்துவது போன்ற நடவடிக்கைகளை ஊராட்சித் துறையினர் மேற்கொள்வது பாதிக்கப்படுகிறது என்று கோலாலம்பூர் மாநகர் மன்ற மேயர் டத்தோஸ்ரீ மைமுனா முகமட் ஷரிஃப் தெரிவித்தார்.

வாடகையை முறையாகச் செலுத்தாத தரப்பினரிடமிருந்து வாடகைப் பணத்தைப் பெறும் நிமித்தம் பல்வேறு நடவடிக்கைகளை டிபிகேஎல் மேற்கொண்டு வருகிறது. குடிநீர் விநியோகத்தைத் துண்டிப்பது, எச்சரிக்கை அறிக்கையை வெளியிடுவது, நிதி நிர்வாக ஆலோசனைத் திட்டங்களை ஏற்பாடு செய்வது, வாடகைக் கட்டணத்தைச் செலுத்துவதற்கான திட்டங்களை வழங்குவது போன்ற பல்வேறு நடவடிக்கைகள் அதில் அடங்கும்.

வாடகைப் பணம் முறையாகப் பெறப்படுவதற்கு இவ்வாறான நடவடிக்கைகள் மிக அவசியமாகும்.

பெறப்படும் வாடகைப் பணத்தை அடிப்படையாகக் கொண்டுதான் மக்களுக்கு சிறந்த சேவைத் திட்டங்களை வழங்க முடியும் என்பதை யாவரும் நினைவில் கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார். கோலாலம்பூரில் நேற்றுமுன்தினம் "பிபிஆர் பெஸ்தாரி" என்ற திட்டத்தைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். நகரவாசிகளின் பாதுகாப்பை உறுதி செய்யக்கூடிய நலத் திட்டமாகும் அது.

நிதி வளம் கொண்ட வாடகையாளர்களுக்கு பிபிஆர், பிஏ வீடுகளை விற்கும் நடவடிக்கையையும் டிபிகேஎல் ஆலோசிக்கிறது என்ற தகவலையும் அவர் தெரிவித்தார்.